



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன்
க. யோகானந்தன்

# காற்றுக்குத் தூதுவிட்டு.....

கவிதைகள்

**கனகசூரியம் யோகானந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Title
Kaatrukku Thooduvittu
Kanagasooriyam Yogananthan

நூல் தலைப்பு
"காற்றுக்குத் தூதுவிட்டு....."

நூலாசிரியர்
கனகசூரியம் யோகானந்தன்
கலைப்பட்டதாரி
(ஓய்வு பெற்ற அதிபர்)

வகை
கவிதை

முதற்பதிப்பு
2023 ஜூலை

பதிப்பாளர்
க.யோகானந்தன்

ISBN : 978-624-99849-0-5

அச்சு
ஏ.ஆர்.பிரிண்டர்ஸ், திருகோணமலை
0776566173

விலை ரூபா.
600.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



இலக்கிய ஆளுமை
அமரர். நந்தினி சேவியர்
அவர்களுக்கு
இந்நூலை
சமர்ப்பணம்
செய்கிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரின் வெளியீடு செய்த பிற நூல்கள்

1. "உண்மை என்றும் உயிர் பெறும்"- கவிதை
   (2006 தேசிய சாஹித்திய மண்டலப் பரிசு)
2. "மழலைக்கோர் பாட்டு" - சிறுவர் பாடல்
3. "என் மனவானில்" - கவிதை
4. "நதியில்லா ஓடம்" - கவிதை
   (பிரமிள் விருது )

புனைப்பெயர் :- சம்பூர் தாஸன்

தொ.இல :- 0773605569 / 0262221807

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

யோகானந்தன் பேராதனை பல்கலைக்கழகக் கலைப்பட்டதாரி, ஓய்வு பெற்ற அதிபர், தமிழ் இலக்கியத்தில் ஆழ்ந்த புலமையும் ஈடுபாடும் படைப்பாக்க ஆளுமையும் கொண்டவர்.இதுவரை மூன்று கவிதைத்தொகுப்புகள் உட்பட அவரது நான்கு நூல்கள் வெளிவந்துள்ளன.கவிதைத்தொகுப்புகளுள் 'உண்மை என்றும் உயிர் பெறும்' எனும் தொகுதி 2006இல் தேசிய சாஹித்திய மண்டலப் பரிசுப் பெற்றுள்ளது. இன்னொரு தொகுதியான 'நதியில்லா ஓடம்' 'பிரமிள் விருது' பெற்றுள்ளது. நிற்க.மொழி பிறந்தபோதே கவிதையும் பிறந்துவிட்டதாகக் கருதப்படுகிறது.மொழியின் சுவாசமாகக் கவிதையே என்றும் நின்று நிலவுகிறது.இக்கவிதை படைப்பாக்கத் திறன் கொண்டவோர் இலக்கிய வடிவம் .இலக்கியப் படைப்புகளுள்ளே கவிதைக்கென்று சில தனித்துவமான குணாம்சங்களும் நுணுக்கங்களும் உள்ளன. இக் கவிதை என்றுமே மண்ணோடும் மக்களோடும் வாழ்கிறது. சமூக, பொருளாதார ,அரசியல் ,பண்பாட்டம்சங்களான அன்பு, நேயம் ,ஆசை, காதல், இன்பம், ஏக்கம் , எதிர்ப்பார்ப்பு, வறுமை, சோகம்,துன்பம் , கோபம் முதலானவற்றின் வெளிப்பாடாக கவிதை எப்போதும் மக்களோடு வாழ்கிறது. எப்போதும் அழகைத் தேடிக் கொண்டிருப்பவன் , மனிதன். தனது புலமையையும் உணர்வையும் ஆற்றலையும் வெளிப்படுத்த முனையும் அவனுக்கு கவிதை ஒரு நல்ல ஊடகமாக விளங்குகிறது. இவ்வாறு தான் சார்ந்த மண்ணோடும் மக்களோடும் வாழும் சமூக, பொருளாதார,அரசியல்,பண்பாட்டம்சங்களான அன்பு, நேயம் ,ஆசை, காதல், இன்பம், ஏக்கம், எதிரிப்பார்ப்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமை, சோகம், துன்பம், கோபம் முதலானவற்றை வெளிப்படுத்த யோகானந்தன் கவிதையை ஒரு நல்ல ஊடகமாக இனம்கண்டுள்ளார்.தனது புலமையையும் உணர்வையும் வெளிப்படுத்த கவிதையை பயன்படுத்தியுள்ளார்.சிறந்த கவிதைகளை உருவாக்க அறிவும் உணர்வும் வேண்டும் , உழைப்பும் முயற்சியும் வேண்டும், ஒரு தேவையும் நோக்கமும் வேண்டும் . யோகானந்தனுக்கு இயல்பாகவே இந்த அறிவும் உணர்வும் வாய்த்திருக்கிறது. அதனால் கவிதையை ஆக்குவதற்கான உழைப்பிலும் முயற்சியிலும் தொடர்ந்தியங்கி வந்திருக்கிறார். அதேவேளை, காத்திரமான கவிதைகளை இயற்றுவதற்கான தேவையும் நோக்கமும் அவருக்கிருந்தது.இவை யோகானந்தனிடம் ஒருங்கே வாய்த்ததனால் தான் அவரால் சிறந்த கவிதைகளை ஆக்க முடிந்ததுள்ளது. அவரது கவிதைகளை ஆழ்ந்து அவதானிப்பதன் மூலம் இதனை புரிந்து கொள்ளலாம்.

யோகானந்தனின் கவிதைகளின் உள்ளடக்கங்கள் கனதியானவை காத்திரமானவை. அவரது சமூக உணர்வும் போராட்டகுணமும் இயற்கை மீதான அதீத ஈடுபாடும் கவிதைகளில் விரவிக் காணப்படுகின்றன. அவ்வகையில் சமூக உணர்வு, மானிட நேயம், காதல், இயற்கை போன்றவை அவரது கவிதைகளின் பிரதான உள்ளடக்கங்களாக திகழ்கின்றன. அவரது சமூக உணர்வை நேரடியாக வெளிக்காட்டும் கவிதைகளுள் 'ஒற்றுமை', 'கோட்பாடுகள்' ஆகியன குறிப்பிடத்தக்கவை. அவரது கோட்பாடுகள் என்ற கவிதை சமூக மாற்றத்தை வெளிப்படையாக வேண்டிநிற்கிறது.

அவரது சமூக நோக்கையும் இயற்கை ஈடுபாட்டையும் ஒருங்கே புலப்படுத்தும் கவிதைகளுள் 'மேக ஊர்வலம்',



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வாழ்க்கைச்சரிவுகள்..' ஆகியன குறிப்பிடத்தக்கவை.

"...........................................

ஏழ்மையின்
முகங்கள்
தேசக் கூடாரங்களில்
உறக்கம் கொள்ளும்.
ஆண்டவனும் வருவதில்லை..
ஆள்பவனும் எட்டிப்பார்ப்பதில்லை..
கூடைகள் மட்டும் கண்ணீரால்...."எனவரும் 'மேக ஊர்வலம்'

மலையகத்தின் இயற்கை அழகை வர்ணிப்பதோடு மலையகத் தோட்ட தொழிலாளர்களின் ஏழ்மை குறித்தும் அவர்கள் மீது அக்கறையற்ற தலைமைகள் குறித்தும் பிரஸ்தாபிக்கிறது. அதேபோன்று,

மேகப்போர்வை
பனித்தூறல்களை
பிரசவிக்கும்
தேயிலைக்கு நிறம் தந்தவர்கள்
உரமாகும் அவலம்

அடைபட்டுக்கிடக்கும்
மனிதவாழ்வு
இரு நூற்றாண்டுகளை
உருட்டிச்செல்லும்

ஏழ்மைமுகங்கள்
பிளந்துபோன
சுவர்களிடையே

எட்டிப்பார்க்கும்
இடிந்துபோகும் வாழ்க்கை
பக்கங்கள்
இதயத்தை ரணமாக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனுக்கும்
இரக்கமில்லை
ஆள்பவருக்கும்
அது தெரிவதில்லை

தேர்தல்கால-
வாக்குறுதிகள்
கற்பூரமாய் கரையும்
சில நேரங்களில்
மலைமுகடுகள் சரிந்து
மானுடத்தை புதைத்துவிடும்

விலைவாசிகள்
அவலவாழ்வை
ஈட்டியால் கிழிக்கும்
மண்ணில் பொதுவுடமை
சொந்தமாகும்வரை
ஏக்கங்கள் தொடர்கதையே.

என முடியும் "வாழ்க்கைச் சரிவுகள்..' என்ற கவிதையும் தோட்டத் தொழிலாளர்களின் அவல வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்றது.இவ்வாறான கவிதைகளில் அவரது சமூக அக்கறையும் மானிட நேயத்தையும் தரிசிக்க முடிகிறது. வர்க்க முரண்பாட்டை மறைமுகமாகப்பேசும் அவரது கவிதைகளுள் குறிப்பிடத்தக்கவொன்று 'நட்சத்திரக் கனவுகள்...' ஆகும் . இக்கவிதை ஒரு தொழிலாளியின் அவலத்தை,

"நட்சத்திரக் கனவுகளின் நீட்சியாக
பன்னீர்க்குடம் சிதைந்து போய்
மனிதன் பூமியில் பூக்கிறான்.
தனிமைச் சுரங்கத்தில்
உழன்று வேலை செய்யும்
தொழிலாளியாக அவன்
வரலாறு நீண்டு போகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தம் நித்தம் உருகி
வியர்வை நிலத்தில் சிந்திட
தசையும் எலும்புகளும்
பச்சையம் இழந்து போய்விட
வாழ்க்கைச் சருகாய்
மண்ணில் உதிர்ந்து போகின்றான்...."
என நேரடியாகப் பேசினாலும்.
"சந்திரன் ஒருநாள் செந்நிறமாகும்.
பகல்ப் பொழுது காலம் மாறி
நள்ளிரவாக மாறும்...

ஊர்க்குருவிகளைக் கண்டு கழுகுக்கூட்டங்கள்
பயந்து நடுநடுங்கிப்போகும்
பாம்புகள் மதிமயங்கிப்போய்
தவளைகளிடம் தஞ்சமடையும்..."என குறியீட்டுப்பாங்கில்
காலம் மாறும் எனவும் அப்பொழுது தொழிலாளர்கள் தம்
பழியை தீர்ப்பர் எனவும் மறைமுகமாகக் குறிப்பிடுகின்றார்.
இக் கவிதை வர்க்க முரண்பாடு குறித்துப் பேசுகின்ற ,
முற்போக்குச் சிந்தனை கொண்டவொன்றாகும் .

இவ்வாறே கவிஞர் யோகானந்தன் போராட்டம் , காதல்,
இயற்கை எனத் தனது சிந்தனைத்தளத்தை
விரிவுபடுத்துகின்றார்.'காத்திருப்பு', 'விடுதலை', 'கல்லறை
தீபங்கள்' முதலியன அவரது போராட்ட உணர்வினை
வெளிப்படுத்துவன. 'பருவகாலக் கனவுகள்', 'காதல்
விசித்திரம்' , 'விழி அலை...', 'உடைந்த நிலவு',
'நீயில்லாத வானம்' முதலானவை அவரது காதல்
உணர்வினை பிரதிபலிப்பவை . பரவலாக அவரது
கையாளப்பட்டுள்ள சொல்லாட்சியும் சொற்றொடர்களும்
இயற்கை மீதான அவரது அதீத ஈடுபாட்டை
புலப்படுத்துகின்றன . பனி , நிலவு, வானம், மேகம்,
தென்றல், ஆகாயம், பூ முதலான சொற்களையும்
மேகப்போர்வை, வானவீதி, பனித்துளி,
மௌனஇரவுகள் , நீர்க்குமிழி, நீலவானம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்சத்திரப்பூக்கள், கிழக்குச் சூரியன் முதலான தொடர்களையும் கவிஞர் அலாதியாகக் கையாண்டுள்ளார்.கவிஞர் யோகானந்தனின் உள்ளடக்கங்களுள் குறிப்பிடத்தக்கவொன்று உறவு முறைப்பெருமை . தந்தை, தாய் , கணவன், மனைவி, காதலி , மழலை என உறவுகளின் பெருமை கூறி , அவர்களைச் சிறப்புச் செய்து கவிதை இயற்றுதல் அவரது குறிப்பிடத்தக்கக பண்புகளுள் ஒன்றாகும் .

மேலும், நாட்டின் சமகால அரசியல், பொருளாதார நெருக்கடிகள் குறித்தும் பல்வேறு கவிதைகளைப் படைத்துள்ளார், கவிஞர் யோகானந்தன் . பால்மா - எரிபொருள் - மருந்துத்தட்டுப்பாடு, மாணவர்கள் - ஏழைகள் - விவசாயிகள் எனப் பலரதும் சமூக - பொருளாதார நெருக்கடிகள் முதலானவற்றைத் தனது கவிதைகளில் அவர் பதிவு செய்துள்ளார் . 'வெப்பக்காற்று', 'தேசம்...' , 'ஆச்சரியம்' முதலானவை அவ்வாறான கவிதைகளுள் குறிப்பிடத்தக்கவை. இவ்வாறு மேலும் , பல்வேறு விடயங்கள் குறித்தும் அவர் கவனஞ்செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கவிஞர் யோகானந்தனின் கவியாக்கநெறி கவனத்திற்குரியது. குறியீட்டுப்பாங்கில் கவிதைகளை எழுதுவதில் கைதேர்ந்தவராகவும் அவர் விளங்குகிறார். 'எத்தனை நினைவுகள்' , 'அறுவடைக்காலக் கனவுகள்', 'உணர்வுகள்' , 'மௌனம் கலையும்', 'அக்கினிப்பறவை' முதலானவை குறிப்பிடத்தக்க அவரது குறியீட்டுப்பாங்கான கவிதைகள் . இக்கவிதைகளில் அவர் கையாண்டுள்ள குறியீடுகளை அவதானிக்கும் போது மேலும் சிரத்தையுடன் முயற்சித்தால் தன்னை ஒரு குறியீட்டு கவிஞராக இனங்காட்ட வாய்ப்புண்டு எனத் துணிந்து கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக, கவிஞர் யோகானந்தனின் எல்லாக் கவிதைகள் குறித்தும் விரிவாகச் சொல்ல நினைத்தாலும் கால - நேரம் கருதி வாசகர்களுக்கு வழிவிடுகிறேன் . அவரது கவிதைத் தொகுப்புகள் வரிசையில், தற்போது நான்காவது காத்திரமான ஒரு தொகுப்பாக " காற்றுக்குத் தூதுவிட்டு....." இணைகின்றமை மகிழ்வளிக்கின்றது.

திருகோணமலைத் தமிழ்க் கவிதைப் பாரம்பரியத்தின் தொடர்ச்சிக்குக் கவிஞர் யோகானந்தன் மேலும் பங்காற்ற வேண்டும் என்ற பேரவாவுடன் அவரை வாழ்த்தி வழிவிடுகிறேன்.

என்றும் அன்புடன்
பேராசிரியர் .ஏ.எப்.எம்.அஷ்ரஃப்
மொழித்துறை,
இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையே, நீ வாழி!

ஈழத்தின் சமகாலக் கவிதைச் செல்நெறிகளை நினைவு கூர்ந்து " காற்றுக்குத் தூதுவிட்டு....."என்ற இக்கவிதைத் தொகுப்பின் தனித்துவம் பற்றி எடுத்துரைப்பது இவ்வேளை பொருத்தமானதென்று கருதுகிறேன்.

மேற்கூறிய அடிப்படையில் நோக்கும் போது,இக்கவிஞரது மூன்றாவது தொகுப்பின் கலைப்படைப்பான "என்மன வானில்" என்பதும் நான்காவது தொகுப்பின் தலைப்பான "நதியில்லா ஓடம்" என்பதும் இத்தொகுப்பின் தலைப்பான "காற்றுக்குத் தூதுவிட்டு....."என்பதும் நான் இனம் கண்ட தனித்துவம் எதுவென்பதை உங்களுக்கு உணர்த்தியிருக்கும். இயற்கையின் பல்வேறு கூறுகள்,நிகழ்வுகள், அற்புதங்கள் முதலியன. பேசுபொருள் வெளிப்படுத்தும் மனவுணர்வுகளை வெளிப்படுத்த பயன்படுகின்றன என்பதே, இத்தொகுப்பின் தனித்துவ அம்சங்களுள் தலையாயது என்பது குறிப்பிடத்தக்கது. இயற்கை என்பது சங்க இலக்கிய அகத்திணை மரபின் தனித்துவ அம்சங்களொன்றாகி 'கருப்பொருள்' என்று அழைக்கப்பட்டதனை இலக்கிய ஆர்வலர் அறிந்திருப்பர்.அவ்வாறான இயற்கையானது ஆல்போல தழைத்து அறுகு போல் வேரூன்றி மூங்கில் போல இளைத்து இத்தொகுப்புக் கவிதைகள் பல்வேறு உணர்வுகளை வளப்படுத்துவதும், வலுப்படுத்துவதும் என்பது கண்கூடு!

நட்பு உணர்வு கவிதைத் தலைப்பினூடாக,மிகச்செறிவான முறையில் பின்வரும் கவிதையில் வெளிப்படுகின்றது. 'நீயில்லாத வானம்' கவிதை பின்வருமாறு அமைந்து நிற்கிறது. கோடி நிலவுகள்

கூடி நின்றாலும்
நீயில்லாத வானம்
இருண்ட உலகமே-
பார்வைகளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவிழந்து
வீழ்ந்து கிடக்கிறேன்
உன் நட்புக்காய்!

காதல் உணர்வு மற்றொரு விதத்தில் வெளிப்படுகின்றது."பகலின் அந்தரங்கம்"என்ற கவிதை சாட்சியாகிறது.

வானம் உடைந்து
மையிருள்-
பூசிக்கொள்ளும்
..........................

உன் தேகம்
உயிரிலே கலந்து
உறவாகிப் போகும்

சின்னவிரல்கள்-
உடல்பட்டு
நகக்குறிகள்
சித்திரம் பேசும்.

பிறிதொரு கோணத்தில் "கொல்லும் இரவுகளில்"கவிதை வரிகள் வீழ்ந்து செல்லுகின்றன.எடுத்துக்காட்டாக,

விழிமூடித் தூங்கும் நேரம்..
கொல்லும் இரவுகள்
மர இடுக்குகளில்
மறைந்து போகும்...
..............................

தனிமை செய்யும் கொடுமை 'அர்த்தசாமத்தில்'தெளிவாக வெளிப்படுகின்றது.ஊர்தூங்கும்

அர்த்தசாமத்தில்
நான் மட்டும்
விழித்திருக்கிறேன்-
..............................

நரை திரைக்கோடுகள்
சித்திரங்களாய்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமை அப்படியே
சுருங்கிப் போகிறது..

..............................

பேசுபொருள் அரசியலாகின்ற போதும் , இயற்கையே கைகொடுக்கின்றது."தியாகச்சுவடுகள்"என்ற கவிதையில் வரும் அழகிய வரிகள்,

..............................

வேர்களின் வலிகள்
விழுதுகளுக்குத்
தெரிவதில்லை..
வாழ்விழந்து போன
சின்னங்கள்
வலுவிழந்தன...

..............................

ஈழத்தின் சமகால பொருளாதார சரிவுகள் பற்றிப் பேசவும் அதுவே துணை செய்கின்றது."துயரம் தரும் வலிகள்" என்ற கவிதை அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகிறது. மேகம் மூடிய மலைகளுக்குள் 'வாழ்ந்து' வருகின்ற மலையக மக்களின் துயர வலிகளை வெளிப்படுத்த இயற்கைச் சூழல் பேருதவி புரிவதை "மேக ஊர்வலம்" சிறப்பாக வெளிப்படுத்துகின்றது. மேற்குறிப்பிட்டவாறு அகமும், புறமும் சார்ந்த மனஉணர்வுகளை கோடுகளாகவும், கோலங்களாகவும் வெளிப்படுத்த இயன்றளவு 'இயற்கை'யை பயன்படுத்தும் இக்கவிஞரது, கவித்திறன் பாராட்டிற்குரியது என்பதில் ஐயமில்லை.இத்தகைய ஆற்றல் இனிவருங்காலங்களில் மண்சரிவு, பூமியதிர்ச்சி நிலைமைகளை ஏற்படுத்தாமல் பார்த்துக்கொள்வது இக்கவிஞனின் கடமையாகும்.

வாழ்த்துக்களுடன்
பேராசிரியர் . செ. யோகராசா
மேனாள் மொழித்துறைத் தலைவர்
கிழக்குப்பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு என்பது சிப்பியையே முத்தாக்கக் கூடியது

நான்கு தசாப்தகால நட்புச் சோலையில் நாங்கள்
பட்டாம்பூச்சிகளாகப் பறந்து திரிந்தவர்கள்
நண்பர் கனகசூரியம் யோகானந்தன்
தமிழையே எழுதுகோலாகப் பிடித்தவர்
பேராதனைப் பல்கலைக்கழகப்
பச்சை வானத்தில் விண்மீன்களாய் ஜொலித்தவர்கள் நாங்கள்
விரிவுரை மண்டபவிளக்கில் ஒளிர்ந்தவர்கள் நாங்கள்
இருவரும் ஒரே பேராசிரியர்க்கடலில் கலந்தவர்கள்

கவிதை என்றால்
கவிஞனுக்கும் வாசகனுக்கும் இடையில் உள்ள
மொழிப்பாலம் போன்றது
அது
துர்வாடையை அத்தர் வாசமாக்கிவிடக் கூடியது

கோடையில் மழை செய்பவனும்
ஓடையில் கப்பல் விடுபவனும் கவிஞன்தான்

சேலையில் பூ வர்ணம் போடுவது கவிதையல்ல
பாலை நிலத்தில் பூக்கள் உண்டாக்குவது கவிதை

உயிர் ஊதுகின்ற புல்லாங்குழல்
கவிதை

கவிதை
இசையாய் உதிர்ந்து உயிர் முழுதும் பரவக் கூடியது
கறுப்பு பற்றி எழுதிய கவிதையில்
கவிஞன் தெரிய வேண்டும் வண்ணமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு துளிக் கவிதை சிப்பியையே முத்தாக்கி விடுகிறது

கவிதை
விளக்கேற்றி வைக்கிறது இருளை விரட்டுகிறது

குழம்பிய மனிதனைத் தெளிவடையச் செய்கிறது கவிதை
தெளிவான மனிதனைக் குழப்புவது கவிதையின் பண்பல்ல

பூமி தட்டை என்று சொல்லும் துணிவும் திறனும்
கவிதைக்கு மட்டுந்தான் உண்டு

இருநூற்று நாற்பத்தேழு நரம்புகள் கொண்ட யாழ்தான்
தமிழ்
ஆறாவது விரலால் கவிதை மீட்டுகிறான் கவிஞன்

வண்டை ஈர்த்தெடுத்து தேன் கொடுக்கின்ற மலராகக் கவிதை
இருக்க வேண்டும்
யார் என்ன சொன்னாலும்
கவிதை சொல்ல வேண்டும் கவிதை இதுதானென்று

கவிதை ஆலமரம்
கிளைகள் பலவென்றாலும் உயிர் இருக்க வேண்டும்
வேரிலும் விழுதிலும்

" உயிர் உதிர்ந்தால் மரணம்
உதிர்ந்த உயிர் எழுந்தால் கவிதை "
இந்த வரம்புகளுக்குள் இருக்கின்ற தண்ணீராக இந்த
நரம்புகளுக்குள் ஓடுகின்ற குருதியாகவே கனகசூரியம்
யோகானந்தனின் காற்றுக்குத் தூது விட்டு கவிதை நூற்காற்றை
நான் சுவாசிக்கிறேன்

எமது நட்பு எல்லையைக் கடந்து
மேலே கவிதை என்றால் என்ன என்ற விளக்கங்களுக்கு
அமைவாக கனகசூரியம் யோகானந்தனின் கவிதை வயலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறங்கிய போது
அவரின் எழுத்துக்களுடைய விளைச்சலைப் பெற்றேன்

நான்கு நூல்களை இதுவரை வெளியிட்டு இலக்கிய உலகுக்கு
தனது எழுத்தின் முகத்தைக் காண்பித்தவர் கனகசூரியம்
யோகானந்தன்

காற்றுக்குத் தூதுவிட்டு என்ற முதற் கவிதையால்
காற்றினைக் கண்களுக்கு வடிவமாகவே காண்பிக்கிறார்
வாசகர்களுக்கு காற்றினை உருவகமாகக் காண்பிப்பது
கவிஞரின் திறமை
இன்னும்....

புல்லாங்குழல் துவாரம் வழியாக
இசைகூட்டி உருகி உரசுகிறது என்ற வரிகளுள் காற்று
வீசுவதை உணரக்கூடியதாக இருக்கிறது

வேடிக்கை உலகம் என்ற ஒரு கவிதையில்
பிரச்சினைகளை
மட்டும் சொல்லாமல்
பிரச்சினைகளுக்குஉரிய தீர்வையும் ஒரு நீதிபதி போல்
சொல்லிவிடுகிறார்
ஒரு நல்ல தேர்ந்த கவிஞனுக்கு உயரிய சிறப்பு இது

அதிகமான கவிஞர்கள் மரத்தைப் பற்றிச் சொல்லும் போது
அதன் வேரை மறந்து விடுகிறார்கள்

ஆனால் கவிஞர் தனது கவிதை மரங்களின் வேரைக்
காட்டுகிறார்
நீர் வார்க்கவும் செய்கிறார்

ஒரு மிட்டாய் பல் சுவை தருமானால்
அது கவிதை கனகசூரியம் யோகானந்தன் கவிதை
ரோஜாச் செடியில் மல்லிகை பூக்கச் செய்கிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்காலக் கவிதைகள் இந்தப் பழத்தோட்டத்தில்
கனிந்திருந்தாலும் சுவைத்தால் கண்ணீரே சுவையாகிவிடுகிறது
காலத்தைச் செதுக்குவது இலக்கியத்தின் பண்பு என்பதற்கு ஏற்ப
எமது மக்களின் துயரத்தை வெளிச்சம் ஏற்றி விளங்க
வைப்பதும் கவிஞனின் கடமை

வேடிக்கை உலகம் என்ற கவிதை இதைத்தான் முள்ளாகப்
பூத்திருக்கிறது

கிழக்கு விடியும்
ஒரு நாள் அட்சயபாத்திரங்கள் நிரம்பி வழியும்
என்று நம்பிக்கைக் கொடியினை வரிகளில் ஏற்றிக் காட்டுகிறார்
கவிஞர் யோகானந்தன்

எமது மக்களின் வாழ்வியலைச் சிதைத்துப் புதைத்த இருட்டுக்
காலத்தை நினைத்தாலே நெஞ்சம் துடிக்கும் காட்சியை
எழுதுகோல் காமரா கொண்டு காட்சிப்படுத்தும் விதம் கைகள்
தட்டக்கூடியது

மலர்களாய் இருந்தோம் என்ற கவிதைதான் அது

பொன் விளையும் நிலங்கள் கொண்டிருந்தோம்
கொத்துக் குண்டுகளால் உடலைத் துளைத்தெடுத்தார்கள்
அக்கால துயர மழை பொழிகின்ற உண்மைகளைக் கூறி எமது
உணர்வுகளை நனைத்து விடுவதும் அருமை

கவிஞர் கிழக்கு மண்ணின் சூரியன் என்றாலும் அவர் மலை
நாட்டிலும் எழுத்துக்களால் உதித்திடவும் மறக்க வில்லை
தோட்டத் தொழிலாளர் வாழ்வு சூடிய முட் கிரீடத்தையும்
கவிதையால் காட்டுவது மனதை நெருட நெகிழ வைக்கிறது

தேயிலைக்கு நிறம் தந்தவர்கள் உரமாகும் அவலம் என
உண்மையின் வெளிச்சத்தை
துயரத்தின் இருட்டை ஒரே பார்வையில் காட்டுவது கவிஞரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனி முத்திரை

ஒரு பெண்ணின் அழகு கண்ட
காகம் கூட கூவிடலாம்
அவளின் வடிவம் உண்ட கண்கள் கவிதைகளால் பேசிடலாம்

பெண்மை என்ற கவிதை பெண்ணை இப்படி வர்ணித்து
வியக்கிறது

தாமரைமுகம்
மீன்விழி
தேன்செவ்விதழ்
பிரம்மனின் படையல் என்கிறார் கவிஞர்

கவிதை என்பது நீருக்குள் நெருப்புக் கொண்டு செல்வது
போன்றது
நெருப்புக்குள் நீர் கொண்டு செல்வதற்கு ஒப்பானது

ஒரு நல்ல கவிதை வாசகனின் கதவுகளைத் தட்டக்கூடாது
அது தானாகவே வீட்டின் உள்ளே நுழைய வேண்டும்

இருளின் சங்கமம் என்ற கவிதை கூட எனது கதவுகளைத்
தட்டிக் கொண்டு நிற்காமல் உள்ளே தானாக உட்புகுந்து
கொண்டது

பசுமை தேசம்
வீணர்களால்
வெந்து தணிகிறது

இது எவ்வளவு பெரிய வெளிப்படை

கவிதை இலகுவானது
சிக்கல்கள் இல்லாதது
படிப்பவரைச் சிக்க வைப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுக்கு ஏற்ற கவிதைப் பட்டுப்பூச்சிகள் கவிஞரின்
கவிதைகளாக மொய்த்துக் கிடக்கின்றன

எமது வாழ்க்கை
எமது மனநிலை
எப்படி என்பதை ஒற்றுமை என்ற கவிதை சுட்டிக் காட்டுகிறது

அகலிகையாய்
சாபவிமோசனமின்றி
கல்லாகி இறுகிக் கிடக்கிறோம்
என்று பதிவு செய்கிறார் கவிஞர்

அதே கவிதைச் செடியில்

தனித்துக் குரலெழுப்பி
சாதிக்க முடியவில்லை
பல குரல்களால் ஒலிப்போம்
இலக்கை அடையும்வரை
என்று தீயாய்ப் பூத்து நிற்பது கவிஞனுக்கே உரிய மிடுக்கு

தியாகச் சுவடுகள் கவிதை போல சிறப்பான பல கவிதைகள்
காற்றுக்குத் தூதுவிட்டு கவிதை நூலில்
நெருப்பாகச் சுவாலை விடுகிறது
குளிராக அலையடிக்கிறது
முள்ளாகத் தைக்கிறது
பூவாக மணம் வீசுகிறது
தேனாகத் தித்திக்கிறது
கசப்பான சுவையை இதய நாவில் தடவுகிறது

குழந்தைகளுக்காக
தோள்கள்
சிலுவை சுமக்கும் அப்பாக்களையும் இங்கே தரிசிக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயரம் தரும் வலிகள்
ஒரு வியப்பபான
எதிர்வு கூறல் கவிதை
ஒரு நல்ல கவிஞனின் வாக்குப் பலிக்கும் என்பார்களே
அது இதுதான்

வேடனையே வேட்டையாடக் கூடியது காதல்

காதல் உயிர் உணர்வு கொண்ட தொடர்பு
இப்படித்தான் காதலை விசித்திரமாகப் பார்க்கிறார் கவிஞர்
விரித்தவர்கள்
தெரிந்து கொள்ளாமலே சிக்கித் தவிக்கும் வலை
அனுபவ மொழி இது
இந்த வலைக்குள் விழாதவர்களே இல்லை அல்லவா
இந்தக் கலையைக் கல்லாதவர்களே இல்லை

இப்படி.... இப்படி அருமையான கவிதைச் செடிகளை நட்டு நட்டு
பூப்பூவாகப் பூத்திருக்கிறார் சம்பூரான் கவிஞர் யோகானந்தன்

உருவகக் கற்கள் கொண்டு கட்டிய கவிதை மாளிகை
நினைவுப் பெட்டகம்
உணர்வுக்காடு
இலைநரம்புகள்
இரவுப்பறவை
இன்னும் இன்னுமாக படிமத் தேநீர் தயாரித்து வழங்கி
இருக்கிறார்
உணர்வுச் சிறப்பு பொருட்சிறப்பு என்ற கால்களால் இலக்கிய
வீதியில் பயணித்திருக்கும் கவிஞருக்கு எனது பாராட்டுக்
கைதட்டல்கள்

ராஜகவி ராஹில்
7 7 2023



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களோடு சில வார்த்தைகள்........

உள்ளதை உள்ளபடி காட்டுவது அறிவியல், உள்ளத்தை உணர்வாகக் காட்டுவது இலக்கியம் என்பர்.அந்த வகையில் கவிதை முதன்மை பெறுகிறது.குளிர்ந்து வரும் தென்றல் என்னை மெய்மறக்கச் செய்ததோடு வார்த்தைகளுக்கு கவிவடிவம் தந்திருக்கிறது. கவிதைகளில் இருந்து விடுபட மனம் எண்ணிய போதும் காலத்திடமிருந்து விடுபட முடியவில்லை.

மனதில் தோன்றிய எண்ண அலைகளை அவ்வப்போது, கவிதைவரிகளாக பதிவு செய்திருக்கிறேன்.எனது கவிதைகள் இறுகிப்போயிருக்கும் இதயப்பாறைகளை மெல்ல மெல்ல இளக வைக்கும் என ஆழமாக நம்புகிறேன்."காற்றுக்குத் தூதுவிட்டு"எனும் கவிதைநூல் வாசகர் மத்தியில் சிறுசிறு மாற்றங்களை,ஏற்படுத்துமாக இருந்தால் அகம் மகிழ்வேன் இந்நூல் எனது ஐந்தாவது நூலாக அமைகிறது.

முகநூல் வழியாகவும், சிறுசஞ்சிகைகள் வானொலி மூலமாகவும் , அவ்வப்போது வெளிவந்த கவிதைகள் நூலில் இடம்பெற்றுள்ளன.எமது தேசத்தின் நிலையினையும் யதார்த்த சூழ்நிலைகளையும் முடியுமானவரை குறியீட்டு வடிவங்களில் சொல்லியிருக்கிறேன்.இலக்கிய வடிவங்களில் கவிதையை 'ஒரு வாயு' என்பர். அது அடக்கப்படும் "குடுவை" வடிவமாகவே அமைந்து விடுகிறது. அத்தோடு சிறந்த வாசகர்களின் பார்வையில் சிறப்பாக கட்டியெழுப்பப்படுவதாகவும் குறிப்பிடுவர்.

விமர்சிக்காத கலைகளும் இலக்கியங்களும் முழுமைபெறாதென்பர். அந்த வகையில் வாசகனின் சிந்தனைப் போக்கிற்கும் , வாசகனின் விமர்சனங்களுக்கும் உட்படுகின்றபோது என்னைப் புடம்போட்டுக் கொள்ள உந்துதலளிக்கும் என நம்புகிறேன். வேலைப்பழுவுக்கு மத்தியிலும் எனது அன்பு வேண்டுகோளை ஏற்று,சிறப்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரையை வழங்கிய, தென்கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் அ.ப.மு.அஷ்ரஃப் வழங்கியிருந்தார்.அவருக்கு மனப்பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். "இயற்கையே நீ வாழி!" எனும் தலைப்பில் எண்ணங்களை வடித்திருக்கும் கிழக்குப் பல்கலைக்கழக மேனாள் பேராசிரியர் செ.யோகராசா அவர்களுக்கு நன்றி கூறுகிறேன். அத்தோடு பேராதனைப் பல்கலைக்கழக நண்பன் அன்பிற்குரிய கவிஞர் ராஜகவி ராஹில் அவர்கள் தனது இதயத்தின் ஊடாக கவிதை பற்றிய பார்வையைச் செலுத்தி, குறிப்புக்களை வழங்கியிருந்தார். அவருக்கு மனப்பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலாசிரியர் பற்றிய குறிப்புக்களை தந்துதவிய எனது மண்சார்ந்த வரலாற்று ஆய்வாளரும் மருத்துவருமான அருமைநாதன் சதீஸ்குமார் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றும் அழகிய முறையில் நூலை அச்சிட்டு வழங்கிய ஏ.ஆர்.ரேடர்ஸ் உரிமையாளர், ஊழியர் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். தொடர்ந்து என்னை எழுத ஊக்குவித்து வரும் இலக்கிய நண்பர்கள் வாசக பெருமக்களுக்கும் நன்றி கூறுகிறேன்.காலத்தின் நடைமுறைகளை மையமாகக் கொண்டு இயங்கும் இந்த நூலுக்கு காலம் எத்தகைய மரியாதையைத் தரப்போகிறது என்ற ஏக்கத்தோடும், எதிர்பார்ப்போடும் காத்திருக்கிறேன்.

என்றும் அன்புடன்
சம்பூர் தாஸன் க.யோகானந்தன்
ஜுலை - 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றுக்குத் தூதுவிட்டு......

கைக்குள் அடங்காத காற்றை
ஆகர் சிந்தித்துக் கொண்டு
காற்றுக்குத் தூதுவிட்டு
காத்திருக்கின்றேன்......

உடலை வருடிவரும் காற்றுக்கு
எத்தனை எத்தனை அழகு
புல்லாங்குழல் துவாரம் வழியாக
இசை கூட்டி உருகி உரசுகிறது

மரங்களின் ஊமை நாக்குகளை
சலசலத்து பேசவைத்து விடுகிறது
கடலலைகளை மேலெழுப்பி
குதூகலம் கொள்ளச் செய்கிறது

பூக்களை பூப்படைய வைத்து
சந்திரோதயம் நடாத்துகிறது
குழந்தை மழலை மொழிபேசி
குதூகலிக்கச் செய்கிறது

ஒவ்வொரு தொடுகையிலும்
ஓராயிரம் அர்த்தங்கள் மறைந்திருக்கும்
பூமியைத் தீண்டும் போது மட்டும்
அழுக்கடைந்து போய்விடுகிறது

வரிகளில் மறைந்து கிடக்கும்
கவிதை மலர்கள் மலர்வதற்காய்
உலகமே கோடித்தவம் செய்து
காத்துக்கிடக்கிறது வருகைக்காக.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருப்பு

மஞ்சள் வெயில் தெறிக்கும்
சீனப்பட்டு வீதிகளில்......
இளைஞர்கள்
காத்திருக்கிறார்கள்-

பூபாளம் கேட்கும்-
புதிய விடியலுக்காக...
கனவுகள் பலித்திட
நாட்கள் மட்டுமே..
விரைந்து மறைகின்றன..

சில நேரங்களில்..
வெந்து போன
மனித மனங்களை மழை
குளிர்விக்கின்றது..

தேசத்தின் விடியலுக்காய்
உயிர்த் தியாகங்கள்
வீதியில் மலிந்து போகின்றன.

கண்ணீரில்.
இரத்தம் கரைகிறது..

காலதேவனின் முடிவிற்காக
நீதிதேவதை...
ஏங்கித்தவிக்கின்றாள்...

காத்திருப்பு..
காலத்தை நகர்த்திச்சென்றாலும்
மாற்றம் மட்டும்..
உறுதியானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேடிக்கை உலகம்

வேடிக்கை உலகம்
ஏழைகளை(ச்)
சிரிக்கச் சொல்கிறது

அவர்களால்
சிரிக்க முடியவில்லை
அழுகை மட்டுமே
கண்களை ஈரமாக்கிவிட்டது

தொடுவானத்தில்
சூடுகண்ட மேகமாய்-
நாட்கள் நகருகின்றன
சூரியன் விழித்துக்கொள்ளும்
காலைப்பொழுதில்
எந்தப்பொருட்களின் விலைகள்
இரவுநேரக் கனவுகள்
முடிவிலிகளாய் நீட்சிபெறுகின்றன.

பாழாய்ப்போன வயிறு
பால்மாவிற்காய்
ஏக்கம் கொண்டு தவிக்கிறது.

வாழ்க்கை-
பாலைவனத்து மலராகிறது
கிழக்கு விடியும்
ஒருநாள்-
அட்சய பாத்திரங்கள்
நிறைந்துவரும்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை

விடுதலை எனும்
ஒற்றை வார்த்தை
ஒரு நாளில்
கிடைத்துவிடாதது
ஊனும் உயிரும் கலந்தது

உணர்வு கூட்டிய
ஆத்ம ராகம்-
உள்ளத்தில் இசைக்கும்..

இலக்கை நோக்கிய
நீண்ட பயணம்-
மரணபயம் அற்றுப்போகும்
புனிதமான பயணம்..

முதலாளித்துவத்தின்
அரசியல் சாக்கடைகள்.
இடம் மாறி அழிந்துபோகும்..

ஏகாதிபத்தியத்தின்..
வலியபூட்டுகள்
தொண்டர்களால்
அடித்து நொறுக்கப்படும்..

விடுதலை..
ஓரிரவில் முடிந்து விடுவதில்லை
பதவிவெறியர்களின்..
குரல்வளைகள்..
நெரிக்கப்படும் நாளில்..
அது புரட்சிப்பூவாய் மலரும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்சத்திரக்கனவுகள்

நட்சத்திரக் கனவுகளின் நீட்சியாய்-
பன்னீர்க்குடம் சிதைந்து போய்
மனிதன் பூமியில் பூக்கிறான்.

தனிமைச் சுரங்கத்தில்
உழன்று வேலை செய்யும்
தொழிலாளியாக அவன்
நித்தம் நித்தம்
உடல் உருகிப் போய்
வியர்வை நிலத்தில் சிந்திட
தசைகளும் எழும்புகளும்
பச்சையம் இழந்து போய்விட
வாழ்க்கைச் சருகாய்
மண்ணில் உதிர்கிறான்

சந்திரன் ஒருநாள்
செந்நிறமாகும்.
பகல்ப் பொழுது ஒருநாள்
நள்ளிரவாகும்-

ஊர்க்குருவிகளைக் கண்டு
கழுகுகள்-
பயந்து நடுநடுங்கிப்போகும்
பாம்புகள் மதிமயங்கி
தவளைகளிடம் தஞ்சமடையும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறுவடைக் காலக்கனவுகள்......

என்மனக் குளத்தில்
அறுவடைக் காலக்கனவுகளை
பத்திரப்படுத்தி-
வைத்திருக்கிறேன்

உண்மை புரியாத உலகம்-
சூரியனின் சுழற்சி
காந்த சக்தியால்
மாறுபட்டுப் போகுமாம்-

கிழக்குச் சூரியன்-
திசைமாறிப்போய்
மேற்கில் தோன்றும்

உண்மைத் தத்துவங்கள்
காலாவதியாகப் போய்-
உதிர்ந்த உலகம்-
சொர்க்கம் தேடிக் கொள்ளும்

வானப் போர்வை-
வடிவிழந்து போகும்-
தனித்த இரவை
மனிதன் போர்வையாக்குவான்..

வார்த்தைகளை விஞ்சிய
சித்திரங்களாக-
வானவில் தோன்றும்
பறவையின் சிறகாக
பூமிதொட்டு விரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயரம் தரும் வலிகள்

பூமி ஒருநாள்
சிதைந்து போய்-
பூகம்பத்தை பிறப்பிக்கும்..

மானுடத்தைக் கண்டு
வானம் கண்ணீர்சிந்தும்
உருவங்கள் சிதைந்து போகும்..

உணவிற்காக-
ஆயிரம் கைகள் மேலெழும்
மின்சாரம் இல்லாத வீடுகள்
வெளிச்சத்திற்காய்
தவம் கிடக்கும்-

வீதி முழுவதிலும்
வெற்று வாகனங்கள்
அடுக்கப்பட்டுக்கிடக்கும்

பச்சையமில்லா-
குழந்தைகள்-
எதிர்காலம் தேடும்

ஆட்சியாளர்கள்
வீதிக்கு வருவதற்கு அஞ்சுவார்கள்
வேற்று நாட்டுப் பறவைகள்
உணவு சுமந்து வரும்-

தேர்வுத் தாள்கள் இன்றி
மாணவர் அலைந்து திரிவர்
போக்கிடமின்றி
மானுடம் மாண்டுபோகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேக ஊர்வலம்..

வானவீதியில்
மேகங்கள் ஊர்வலம்-
மலைகளை வருடும்
மலைக்காற்று...

என்முகத்தில் முத்தமிடும்
போர்வையை விலக்கி-
வானம் தொடும்-
சைபிரஸ் மரங்கள்

பூமியின் மார்பிற்கு
அழகுக் கவசமாகும்
தேயிலைச்செடிகள்

தவழ்ந்து வரும்
குளிர் நிலவாய்-
மலையிடுக்குகளில்
அருவிக் குமரிகள்

ஏழ்மையின்
முகங்கள்-
தேசக் கூடாரங்களில்
உறக்கம் கொள்ளும்.

ஆண்டவனும் வருவதில்லை..
ஆள்பவனும்
எட்டிப்பார்ப்பதில்லை..

கூடைகள் மட்டும்
கண்ணீரால்..
நிறைந்து போகும்

(நன்றி "நீங்களும் எழுதலாம்")



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடைக்காலச் செடிகள்

வரண்ட கோடைக்காலத்து
செடிகளாய்
பச்சையம் இழந்த ஏழ்மை
காய்ந்து கிடக்கிறது-

இலைகளைத்தின்னும்
புழுக்களாய்
ஒருகூட்டம் சத்தமின்றி
மானுடச்சருகுகளை
உருக்குலைத்து விடுகின்றன.

ஓ!மானுடர்களே
உங்கள் இதயங்களை
சற்றுத் திறந்து வையுங்கள்
மௌனமாக-
எவரும் அறியா வண்ணம்
சிலுவை சுமக்கும்
மானுடவர்க்கத்திற்காய்-

இலைகள் உதிர்ந்து
போவது கண்டு
மானுடவேர்கள்
கலங்குவதில்லை

இதயங்களில் ஊற்றெடுக்கும்
புனித நீர்த்துளிகள்
கொடிய விஷம் கலப்பதற்கு
முன்னமே
வடிகட்டிவிடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகலிகை

தெருவோரமாய்க் கிடந்த
கல்லில் இருந்து
பெண்ணின் குரல்
அடங்கி ஒலிக்கிறது!

கௌதமன் கொடுத்த
சாபத்தை நினைத்து
கலங்கும் அகலிகையா?
இராமனின் பாதத்தூசிக்காக
காத்திருக்கிறாளா?

முற்றும் துறந்த முனிவனுக்கு
இந்திரன் தந்திரம்
தெரியவில்லை என்றால்
பாவம்!அவள் என்ன செய்வாள்
மோகத்தீயால் வெந்துபோனவள்
சதியை அறிந்திருக்க
நியாயமில்லையே !

வந்தவன் இந்திரன்
என்பதை அறியும் வித்தை
தெரியாத அபலைப்பெண்-
இராமனால் உயிர்ப்பெற்று
எழுந்து வந்து - மௌனியாக நிற்கிறாள்.

கௌதமனைப் பார்த்து
“இந்திரன் உருவெடுத்து வந்து
என்னோடு சேர்ந்து கொள்வீர்களா?”
கௌதமன் தலைகுனிந்து
வெட்கித்துப்போகிறான்
இராமனை வணங்கி
விடைபெறுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூடிய இமைகள்

இமைகளை இறுக்கமாக மூடி
வைத்துப்பார்த்தேன்
கட்டுக்கடங்காமல்

தூக்கி எறிந்து விட்டு-
கண்களில் நிலவு வந்து
அமர்ந்து கொண்டது..

மையிருள் சூழ்ந்து-
பனித்துளி போர்த்திக்கொண்டாலும்.!

தகிக்கும் நிலவின் சூட்டை
அப்படியே அணைத்துக் கொள்ள..

வானம் மட்டும்-
கடுமையாக போராடுகிறது!
காதல் என்பது..
இனம்புரியாத நர்த்தனம்தான்
ஆலிங்கனம் அன்பின்
ஆரவாரம் தான்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தை சொல்

அசையும் பொருளில்
தந்தை முகம்
அன்பைப்பூட்டிவைக்கும்
மௌனப்பெட்டகம்-

வார்த்தைகள்-
அனல் பறக்கும்-
அன்பு பூச்சிந்தும்
மௌனம்
காவல் செய்யும்..

குழந்தைகளுக்காய்
தோள்கள்
சிலுவை சுமக்கும்..

தெய்வங்களை
தோற்கடிக்கும்
பிரம்மனின்
மனிதப் படைப்பு..

வாழும் போது
அன்பு தெரிவதில்லை
வெறுமை கண்டு
நினைவுகள் மட்டும்
முட்டி மோதும்..

நிழல்ப் படமாய்
நின்று
அருள் தரும் தெய்வம்
இருவிழியால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகச் சுவடுகள்

நூற்றாண்டு காலம்
வாழ நினைத்தவர்கள்

மண்ணிலும் விண்ணிலும்
காற்றில் கரைந்து போனார்கள்

தியாகச் சுவடுகள்
மறைந்தன-

வேர்களின் வலிகள்
விழுதுகளுக்குத்
தெரிவதில்லை..

வாழ்விழந்து போன
சின்னங்கள்-
வலுவிழந்தன...

விழிகளின் வெளிச்சம்
ஒழியிழந்து போனது

மானுடங்கள்-
சுயமிழந்து
மண்ணில்உழல்கின்றன

இலைகள் உதிர்ந்தாலும்
வேர்கள் அழுவதில்லை.

புதிய துளிர்ப்புக்காய்
தவம் கிடக்கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் மருந்து

மாலைச்சூரியன்
மறைந்து உதிப்பதற்குள்..
மானுட வாழ்வின்
எத்தனை துன்ப துயரங்கள்...
மாறாத காயங்களாய்

பிறந்த உயிர்கள்
சருகுகளாய்-
உதிர்ந்து போகின்றன

காதலின் ஏமாற்றங்கள்
எத்தனை-
கழுத்தறுப்புகள்
நீட்சி பெற்றுப் போகும்

அவமானங்கள்
அடுக்கடுக்காய்
வந்து போகும்..

எத்தனை இழப்புக்கள்
வாழ்க்கை ஓட்டத்தில்
வறுமையானவன்
சொல்லிழந்து போகிறான்

வறுமையின் இடத்தே
வறுமை சேர்ந்துவிடுகிறது

அத்தனைக்கும்
நம்பிக்கை தரும் மருந்துகள்-
காலத்தின் கைகளில்
காத்துக்கிடக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சரியம்

ஊர்கூடி அழுகிறது.
உணவுக்காய்-
மாணவர் பைகள்..
காய்ந்து கிடக்கின்றன

மரணபயம் மருந்தில்லாமல்-
வந்து போகிறது..
இவைதான் ஆசியாவின்
பெரிய ஆச்சரியம்-

குழந்தை உணவில்-
குவிந்து கிடக்கும் விசக்குவியல்-
வரட்டுச் சித்தாந்தம்-
பேச்சில் அனல் பறக்கும்..

காய்ந்து போன தேசத்தில்
தொல்பொருள் தேடும்-
கழுகுக் கூட்டங்கள்
போதிமாதவனுக்காய்..
இருப்பிடங்கள் தேடுகின்றன

பண்ணிய பாவங்கள்-
போதாதென்று எண்ணி
வார்த்தைகளால்
விஷம் கொட்டுகிறார்..

காலங்கள் மாறும்
காட்சிகள் விரிந்து செல்லும்..
பட்டினி வயிறுகள்
முழுமை கொள்ளும்
தீப்பறவைகள்-
தாகம் தீர்க்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயின் முந்தானை..

கருவறையில் சுமந்து
அந்தி பகலாய்-
தூக்கம் தொலைத்தவள்
தாய்த்தெய்வம்

தொட்டிலில் தூங்கவைத்து
குழந்தை மேல் விழுந்த
வியர்வைத் துளியை
முந்தானையால்
துடைத்தெடுப்பவள்..

வான் மழை நேரம்
முந்தானைக்குடை
பிடிப்பவள்

தன் பசி மறந்து
உணவூட்டி
குதூகலிப்பவள்

சிரிக்கும் போது
முந்தானை மூடிச்
சிரிப்பாள்
அழுதால்
இமைகளால் அழுவாள்

முந்தானைச்
சுகம் தேடி
இனிய நினைவுகள்
காற்றில் மிதக்கும்-
சுகந்தம் மணக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் விசித்திரம்

காதல் இதயத்தில்
ஊற்றெடுத்து...
கண்களில் முடிவடையும்
விசித்திர விளையாட்டு

இறுகிப் போயிருக்கும்
இதயங்களின்-
இதமான சூடு

விண்ணோடும் முகிலோடும்
தனியாகப் பேசிக்கொள்ளும்
பைத்திய உறவுகள்..

விரித்தவர்கள்..
தெரிந்துகொள்ளாமலே
சிக்கித் தவிக்கும் வலை

உறவுகளை தூக்கியெறிந்து
உணர்வுக்குள் ஒன்றிப்போன
உன்னதமான இன்னிசை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமாற்றங்கள்-
அள்ளித்தரும்
அட்சய பாத்திரம்..

பலரை ஏமாற்றி
ஞானம் கொடுத்த
போதிமரம்..
நேசிப்பவனுக்கு வசந்தம்
ஒதுங்கியவனுக்கு
மீள முடியாத கழிவறை
சந்தித்த வேளை
பெரும் அம்புகள் புறப்படும்
குருஷேஷத்திர போர்க்களம்

தூரத்தில் நின்று
பார்ப்பவனுக்கு-
புரிந்து கொள்ள முடியாத
புதிர் விளையாட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்துக்கள்

இருண்டு கிடக்கும் தேசம்
புலரும் பொழுது
மறைந்து முடிவதற்குள்
எத்தனை மரணங்கள்
எத்தனை ஓலங்கள்-

முகம் சிதைந்து போய்
உருவம் காணமுடியாமல்
உருக்குலைந்து போய்-
சாலையெங்கும் சிதறிய
மானுடப்பிண்டங்கள்-

முந்திச்செல்லும் முனைப்புகள்
செந்நீர் சிந்தும்-
சோகக் காட்சிகள்
குறைவின்றி அரங்கேறும்-

நேற்றுப்போலவே
சாலைகள் விரிந்து செல்லும்
பாவம்! சாலைகள்
என்ன செய்ய முடியும்-

இயந்திரங்களின்
அசுரவேகம்-
சொர்க்கத்திற்கு இழுக்கிறது
சிந்திக்கும் திறன் கொண்ட
மனித மிருகங்கள்-
கவனம் கொள்ளாததேனோ!

மரணம் மலிந்த தேசம்
மௌனித்து நிற்கிறது
தடுக்கும் வழி தெரியாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்நிறம்

உழைப்பை உறிஞ்சியபடி
முழு உலகமும்-
ஆழ்ந்து நித்திரை செய்கிறது-

செந்நிறப் பறவைகள்
இருளைக் கிழித்துக் கொண்டு
புதிய வெளிச்சம் தேடி
உலகை வலம் வருகின்றன-

சிவப்பு உலகின் ஆச்சரிய
குறியீடு அல்ல
புதிய பாதையில் மலரும் பூ...

உள்ளத்து உணர்ச்சிகள்
ஏதோ நினைந்தபடியே
அடக்கு முறைகளை
கட்டுடைக்கும்.

சிவப்புக் கவிதைகள்-
புதிதாக பிறப்பெடுத்து
மானுட விடியலுக்காய்
பூபாளம் இசைக்கும்

உழைப்பின் மகிமைகண்டு
உலகம் விழித்துக் கொள்ளும்
மானுட முகவரிகள்-
தேடி அறியப்பட்டு
கருத்தில் கொள்ளப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கைச் சரிவுகள்

மேகப்போர்வை
பனித்தூறல்களை
பிரசவிக்கும்

தேயிலைக்கு நிறம்தந்தவர்கள்-
உரமாகும் அவலம்

அடைபட்டுக்கிடக்கும்
மனிதவாழ்வு-
இருநூற்றாண்டுகளை
உருட்டிச்செல்லும்..

ஏழ்மைமுகங்கள்
பிளந்துபோன
சுவர்களிடையே..

எட்டிப்பார்க்கும்
இடிந்துபோகும் வாழ்க்கை
பக்கங்கள்..
இதயத்தை ரணமாக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனுக்கும்-
இரக்கமில்லை
ஆள்பவருக்கும்
அது தெரிவதில்லை

தேர்தல்கால-
வாக்குறுதிகள்
கற்பூரமாய் கரையும்

சில நேரங்களில்
மலைமுகடுகள் சரிந்து
மானுடத்தை புதைத்துவிடும்

விலைவாசிகள்
அவலவாழ்வை
ஈட்டியால் கிழிக்கும்
மண்ணில் பொதுவுடமை
சொந்தமாகும்வரை
ஏக்கங்கள் தொடர்கதையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் வருகிறாள்

அந்தகார இருள்(ப்)
போர்வையை விலக்கி

மூன்றாம் பிறை-
நிலவாய்..
அவள் வருகிறாள்

மண்ணை அழகுபடுத்த
பிரம்மன்-
கடைந்து கடைந்து-
செய்த சிற்பமாய் அவள்

ஆழக் கடலைவிட-
அழகுவிழிகள்
ஆழமானவை..

எண்ணப்பறவை-
என்னுள் சிறகடிக்கிறது.

புத்தம் புது மலராய்..
அவள் புறப்பட்டு
வருகிறாள்-

மல்லிகை மலர்கள்
மயங்கி கிடக்கின்றன
போதை வண்டுகள்
முகவரி இழந்து-
கலவி மயக்கத்தில்
மயங்கி உழல்கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எத்தனை நினைவுகள்

மழைக்கால நினைவுப்பறவைகள்..
மண்டையோட்டைக் குடைகின்றன
காந்தள் மலர்களில்..
ஒட்டிப்போன குருதியின் வாசம்

இலக்குகள் தேடிய-
மானுடவாழ்வு!கற்பூரமாய்..
காற்றில் கரைந்து போனதே?

இரவின் கண்களை இறுக்கிப்படித்து-
விடிவிற்காக விடியவிடாமல்...
தடுத்து நிறுத்திய காலம்-

உ...ருண்டு கடந்து போனது-
விடியல் தெரியாமல்!

புறநானூற்றுக் காட்சிகள்
கண்களில் வந்து வந்து போகும்...
குருதிச்சாயம் பூசிய
மானுட ஓவியங்கள் மாத்திரம்
இதயங்களில் சிம்மாசனம் போடும்..

தியாகச் சுவடுகள்-
கண்ணனின் பாதச்சுவடுகளாய்..
கார்த்திகையாய் பூத்துக்குலுங்கும்
வருகைக்காய் காத்திருக்கும்
உறவுகளின் உள்ளங்கள் மட்டும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்பாடுகள்

பழைய கோட்பாடுகள்
விடுபட முடியாதபடி-
இதயத்தில் இறுக்கத்தையும்
நெருக்கடிகளையும் தருகின்றன-

முட்டையின் உள்ளிருந்து
வெளிக்கிளம்பிடத் துடிக்கும்
கோழிக்குஞ்சாய்
ஓட்டினை உடைத்துக்கொண்டு
வெளிவர மனம் துடிக்கிறது

எத்தனை பிரிவினைகள்
எத்தனை கருத்துமுரண்பாடுகள்
மனித மூளையின் அடியில்
உறைந்து போய்க் கிடக்கிறது

அடிவருடித்தனம் கொண்டவர்கள்
பாத்திரத்தில் பெருங்காயமாய்
மணக்க விரும்புகிறார்கள்

புதிய பாதைதேடும் மனிதர்களாய்
புறப்பட்டு கால்பதித்திட-
இங்கு எவருமே தயாரில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடைந்த நிலவு

உடைந்தநிலவு
வந்து பாடுகிறது..
மெல்லிய தென்றல்

இலைகளின் நடுவே
உறங்குகிறது-
மல்லிகை மலர்கள்
சத்தமில்லாமல்

வெள்ளை ஆடை
உடுத்திக் கொள்கிறது

காகிதத்தில்
எழுத நினைத்தேன்
அது மழையில்-
நனைந்துவிடும்
கண்களில் எழுதினேன்
காதலை பத்திரமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுமை

வான்வெளியில்
தூசுகள் நிறைந்து போய்..
மேகக் கோலங்களில்-
குளிர்காலப்போர்வை..

ஏழ்மையின் கொடுமைகள்..
நீட்சி கொண்டு வாட்டி வதைக்கும்-
குச்சிகளை சுமந்து செல்லும்
மனிதப் பறவைகள்-
இருப்பிடங்களை இழந்து போகும்

பாரம் குறைந்த விருட்சங்கள்-
முறிந்து போய் வாழ்விழக்கும்
குளிர்கால கொடுமை..
உயிர்களை கொன்று புதைக்கும்..

பொருள் தேடும் மனிதம்-
கேள்விக்குறியாக
வளைந்து கிடக்கும்...

வறுமையை விரட்டியடிக்கும்..
வழிதெரியாமலே-
ஏழை அடுப்புகள்
உறங்கிக் கிடக்கும்...

குளிர்கால வாழ்க்கை..
ஏழைகளுக்கு தொல்லை தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒற்றுமை

உறவுகள் ஓங்கிய காலம்
உருமாறிப்போக-
ஒற்றுமை சிதைவடைந்து
மனிதர்கள்..
வேற்றுக்கிரக வாசிகளாய்..

அகலிகையாய்-
சாபவிமோசனமின்றி
கல்லாகி
இறுகிக்கிடக்கிறோம்..

வெட்டுக்கள்-
குத்துக்கள் நிறைந்து
இரக்கமின்றி மிருகங்களாய்..
விரிந்து கிடக்கிறது வாழ்க்கை

நெருப்பை விழுங்கி-
உயிர்ப்பிழைக்க..
வரண்ட நாக்குகளோடு-
தாகமடங்காமல்
மனிதம் ஏங்கித் தவிக்கிறது..

தனித்துக் குரலெழுப்பி-
சாதிக்க முடியவில்லை
பலகுரலால் ஒலிப்போம்
இலக்கை அடையும்வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னையர் தினம்

தென்றல் வீசும் வீட்டில்
மன்றம் வந்து பாவிசைக்கும்
இன்பத் தமிழாய் அன்னை
ஈரநிலவு எறிக்க வானில்

கூந்தல் அலையாய் மிதக்கும்
பாசம் தந்து மோசமானாள்
பொருளை அள்ளி மறைந்தாள்
தழுவி உனைத் நெஞ்சத்தில்

நினைத்து வருத்தமுற்றேன்
ஆயிரம் கரங்கள் அன்பு
தழுவி நின்றாலும் பாரில்
உன்னன்பிற்கு ஈடாகுமோ

இறப்பு உண்மை என்பேன்
சுரக்கட்டும் தாயே வரம்
சோம்பலில் அடங்கா நானும்
அன்னையர் தினம் காண்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளின் சங்கமம்....

மௌன இரவில்
இருளின் சங்கமம்

குருட்டு உலகை
ஒற்றை நிலவு
ஒளியேற்றும்-

புதுமைகள் பூப்படைய-
உடலில் உஷ்ணமேறி
கனவுப்பூச்சிகள் -
பறக்கின்றன...

பசுமைத்தேசம்
வீணர்களால்
வெந்து தணிகிறது.

விஞ்ஞான மாயைகள்-
உலகைச் சிதைத்து
மண்ணறைகளில்
மனிதத்தை...
புதைக்கின்றன

அழகுகாட்டிய-
இயற்கை
பச்சையமிழந்த
பச்சைக்குழந்தைகளாய்
பொலிவிழந்து போகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்மை......

பிரபஞ்ச இருளில்
மானுடப் படையல்
பெண்மையின்
மலர்வு-

தாமரை முகமும்
மீன் விழிகளும்
தேன்பசைச்
செவ்விதழ்களும்
பிரம்மனின் படையல்..

தாயாய்த் தாரமாய்-
மகளாய் மருமகளாய்
நீண்ட கனவுகள்-

சித்திரை நிலவாய்-
காணும் போது
கரைந்து போகிறாள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழலைமொழி

வறுத்தெடுக்கும்
கோடைகால
உஷ்ணம்-
தூக்கமின்றி
நினைவுகளை
தொலைத்துவிடும்..

விரல் தொடும்-
உஷ்ணத்தில்
உன் பிஞ்சு விரல்கள்
மார்பினைத் தொட்டு
மயக்கம் தரும்..

வறுமை வெக்கையில்
உடல் சோர்வு..
காணும் நேரம்
பிஞ்சு வாயசைத்து
பரவசம் தருவாய்..

விழிகளால்..
கவிதை எழுதும்
நேரம்..
மழலைமொழி
பனித்துளியாய்-
உடலில்...
ஒட்டிக்கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணர்வுகள்

என் உணர்வுகளை-
பத்திரமாக அடைகாத்து
வைத்திருக்கிறேன்..

நான் காணும் கனவுகளில்-
மனிதர்களின் முகங்கள்-
சிரிப்பின்றி இறுகிக் கிடக்கின்றன..

செங்காந்தள் மலர்கள்
குருதியில் நனைகின்றன..
காணாமல் போனவர்கள்
கடைசிவரை-
கண்களுக்குள் அகப்படவில்லை

நம்பிக்கை விளக்குகள்-
சுயமிழந்து அணைந்து போகின்றன..
எனது பாதை.
பயணமின்றி முடிந்து போகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருப்பு கானல் நீராய்
மறைந்து போகிறது..
குருட்டு வெளிச்சம் மட்டும்
ஆண்டுக்கு ஒரு முறை-
வந்து வந்து போகிறது

மானுடப் பிறப்பின் மகத்துவம்-
விடிவு இல்லாமல் முடிகிறது
காலத்தின் நீட்சியாக-
காட்சிகள் மட்டும் உலாவருகின்றன.

விடுதலை தராத வாழ்வு
பறவை விழுங்கிய பழமாக
எங்கோ முளைக்கிறது
விருட்சமாய் உருப்பெறுவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயரம் தரும் வலிகள்

பூமி ஒருநாள்
சிதைந்து போய்-
பூகம்பத்தை பிறப்பிக்கும்..

மானுடத்தைக் கண்டு
வானம் கண்ணீர் சிந்தும்
உருவங்கள் சிதைந்து போகும்..

உணவிற்காக-
ஆயிரம் கைகள் மேலெழும்
மின்சாரம் இல்லாத வீடுகள்
வெளிச்சத்திற்காய்
தவம் கிடக்கும்..

வீதி முழுவதிலும்
வெற்று வாகனங்கள்
அடுக்கப்பட்டுக் கிடக்கும்

பச்சையமில்லா-
குழந்தைகள்-
எதிர்காலம் தேடும்

ஆட்சியாளர்கள்
வீதிக்கு வருவதற்கு அஞ்சுவார்கள்
வேற்று நாட்டுப் பறவைகள்
உணவு சுமந்து வரும்..

தேர்வுத் தாள்கள் இன்றி
மாணவர் அலைந்து திரிவர்
போக்கிடமின்றி
மானுடம் மாண்டு போகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசம்

தேசத்தேர்
உருண்டுசென்று
சிலருடைய சில்லறைகளில்
சிக்கிச் சிக்கிச்
சிறைப்பட்டுத் தவிக்கிறது...

மனிதர்களின்-
கைகளைக் கட்டிப் போட்டபடி
வடம் பிடிக்கச் சொல்கிறார்கள்-
அரசியல் சாணக்கியர்கள்

தேசத்தின் சிலுவைதனை..
சுமப்பதாகக் கூறியபடி
வயிற்றில் ஓங்கி அடிக்கிறார்கள்

சுதந்திர தேசத்துப் பெற்றோர்கள்
பிள்ளைகளை மறந்து-
பெற்றோலை நினைக்க
வைக்கிறார்கள்..

இலங்கை மாதா
தண்ணீரில் மூழ்கியபடி
சிதைந்து போகிறாள்..

வாக்களித்த மக்களின் தாகம்-
மட்டும் தீரவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடரும் பயணங்கள்...

வானப்போர்வையை
கைகளால் விலக்கியபடி
மேகத்தின் பயணம் தொடர்கிறது.
அருகருகே இருந்தாலும்
தொட்டுக் கொள்ளாமலே
தண்டவாளத்தில் புகையிரத(ப்)
பயணம் தொடர்கிறது...

பார்வைகள் சூடேற்றிக்கொள்ள..
வார்த்தைகள் முழு மௌனமாகி
பயணம் தொடர்கிறது...
கரம்பிடித்த காலம்முதல்
பெண்ணின் கனவுகள்-
சிதறிப்போனாலும்-
வாழ்க்கைப் பயணம் தொடர்கிறது...

தொலைந்த சொந்தங்கள்-
தேடிய மனிதர்கள்...
கால்கள் வலித்தாலும்
பயணங்கள் தொடர்கின்றன...
தாயே நீ கல்லறையில்
உறங்கிய போதும் நினைவுப் பயணம்
தொடர்கிறது-
ஒளி கொடுக்கும் சூரியனின் மறைவு
மறுநாள் வழமைபோல் சீராய்
பயணம் தொடரும்.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைவிடங்கள்...

இயற்கை அளித்த
மலைக்கும் சாரலுக்கும்
சிந்தும் பனித்துளிக்கும்-

வெள்ளைச் சேலையாய்
அசைந்து வரும் அருவிக்கும்
காலையில் எறிக்கும் கதிருக்கும்
எத்தனை மறைவிடங்கள்..

பேச முடியாத-
கணப்பொழுதுகளில்
விழிகள் பேசும் விசித்திரம்

முகக்குறிகள்-
முகப்போர்வையில்
புறப்பட்டுச் செல்லும்

கண்ணிமைக்கும் நேரத்தில்
என்பேனா முனை
உடதடுநனைந்தபடியே
உருகத் தொடங்கிவிடும்

வார்த்தைகள்..
கவிதையாக(ப்)
புறப்பட்டு வீரியமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணவன்

இல்லறம் காத்து நிற்கும்
இல்லக் காவலன்-
தன்னை..
தன்னுள் காண்பவன்

இல்லாளை இதயத்திலும்-
மக்களை தோளிலும் சுமப்பவன்
துன்பச் சிலுவை சுமந்து-
தியாகம் செய்பவன்..

வலிகளை வார்த்தைகளில்-
சொல்லத் தெரியாதவன்..
பாசத்தை மறைத்து வைக்கும்
மனிதப் பெட்டகம்..

கங்குகரையற்ற கடல்-
நினைவுகளில் நீச்சலடிப்பவன்..
இதயத்தின் வழியாக!
அன்பு கொடுப்பவன்..

மனைவிக்குக் கண்ணானவன்
வருத்தம் சொல்லாத-
பூமியின் மகன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆகாயம்

ஆயிரம் கண்கள் திறந்து-
ஆகாயம் அழுகிறது..
வெள்ளம் நிறைந்து!
பூமிபிளந்து..
ஏழைக் குடிசை
இடிந்து போகிறது..

பாலுக்கு ஏங்கிய
பாலகன்..
கனவுகளோடு
நித்திரை செய்கிறான்.

தாயின் கனவுகள்
கலைந்து போனவேளை-
விலைவாசிகள் விண்ணை
முட்டி மோதுகிறது.

இறைவன் படைப்பில்
ஏழைகளுக்கு மட்டுமா?
இருகண்கள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீயில்லாத வானம்....

கோடி நிலவுகள்
கூடி நின்றாலும்
நீயில்லாத வானம்
இருண்ட உலகமே-

பார்வைகளால்
நினைவிழந்து
வீழ்ந்து கிடக்கிறேன்
உன் நட்புக்காய்-

காணும் திசையெல்லாம்
என் விழிகளில்
நீ மட்டுமே
பிம்பமாய்
தெரிகிறாய்-

கேட்கும் இசையில்
நீ மாத்திரம்
நிறைந்திருக்கிறாய்

சிந்தும் பனிமழையில்
பூவின் இதழ்களில்
மெழுகாய்
ஒட்டி உறவாடுகிறாய்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானத்து மேகங்கள்

மாரிகாலத்து மேகங்கள்
வானத்தில் கூடு கட்டும்
மேகக் கூடுகள்
உடைந்து சிதறும்..

மழைமொக்குகள்
மண்தொட்டு
மணம் தரும்..

உறக்கம் கொண்ட
விழித்திரை கிழிந்து போய்
நீண்ட இரவுகள்-
கரைந்து போய்விடும்

அழகு காட்டும் மழைப்போர்வை
ஏழ்மை மனிதத்தை
கிழித்து போட்டுவிடும்

நனைந்த மனிதம்
சூடு தேடும்-
விழிகள் விறைத்துப் போய்
கைகள் ஓட்டைக் கூரைகளை

அழுத விழிகளோடு-
பொருத்திக் கொள்ளும்
மழை நீரைத் தடுப்பதற்காய்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகலின் அந்தரங்கம்

வானம் உடைந்து
மையிருள்-
பூசிக்கொள்ளும்

தடுப்பில்லா
வான்வெளியில்
இதழ் விரித்துப் பூக்கள்
பனித்துளியை
உள்வாங்கிக் கொள்ளும்

பகலின் அந்தரங்கம்
இரவில் திறக்கப்படும்
பகலில் உள்ளவை

படம் பிடிக்கப்பட்டு
இரவிடம் வந்து சேரும்

உன் தேகம்
உயிரிலே கலந்து
உறவாகிப் போகும்

சின்னவிரல்கள்-
உடல்பட்டு
நகக்குறிகள்
சித்திரம் பேசும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்ப்பு

மனித உயிர்ப்பு
உணர்வுகளின் ஊர்வலம்
வேர்களைத் தாங்கும்
விழுதுகள்..

தடைகளைத் தகர்த்து
உணர்வுகளுக்குத் தீமூட்டும்
அக்கினி புத்திரர்கள்..

உணர்ச்சிகள் வெறும்
வார்த்தை அலங்காரங்கள்
மனிதனை முறுக்கேற்றி
வியர்வை சிந்தச் செய்யும்..

நேற்றுக்ளை ..
நாளைய விடியலுக்காய்(ச்)
சேமித்துக் கொள்பவன்
சிந்தும் மழைப்பூ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்லும் இரவுகள்..

விழிமூடித் தூங்கும் நேரம்..
கொல்லும் இரவுகள்
மர இடுக்குகளில்
மறைந்து போகும்...

அன்பை மறைத்து வைத்து
நீள்விழிகளால்-
சிரிக்கிறாள்

இதயத்தின் மூலையில்
மோனாலிசா ஓவியமாய்
பதுங்கியிருக்கிறாள்-

அவள் குரல்-
ஒலிக்கும்
நேரமெல்லாம்
நான் தனிமை தேடுகிறேன்..

தென்றல் தீண்டும்
தேகத்தில்-
காத்திருப்புக்கள்..
மெழுகாய் கரைகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயுட்காலங்கள்

ஆர்ப்பாட்ட உலகில்
ஆயுட்காலங்கள்-
இலையுதிர் காலமாய்
உதிர்ந்து போகிறது-

கண்இமைகளில்
வடிந்து வீழும்-
கண்ணீர்த்துளிகள்
பெருமூச்சாய்
கரைந்து போகும்..

பகலின் நீட்சி
சாரைப் பாம்பாய்-
காத்திருப்புக்கள்
அர்த்தமற்றுப் போகும்

துளைத்தெடுக்கும்
வார்த்தைகள்..
மரண வேதனை தந்து
அடங்கிப்போகும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதுங்கிய நிலவு

வானவீதியில்-
மேகப் போர்வை
பதுங்கிய நிலவை
மௌன இரவுகள்
முழுமையாய் விழுங்கி விடும்

கசப்பான உண்மையின்
ஊர்வலம்-
ஒதுங்கிய உண்மைகள்..

விடியலுக்காய் காத்திருக்கும்
தாயகம் இருண்டிருக்கும்..
பொழுது புலரவில்லை

ஈரம் தோய்ந்த-
எழுது கோல்கள்
ஏங்கித் தவம் கிடக்கிறன
கதிரவன் வரவிற்காய்

பூமிபிளந்துவரும்
விதைகள் முளைக்கும்
மழைக்கரங்கள்-
விருட்சங்களை வீறுகொள்ளச் செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மௌனம் கலையும்...

என் இளமைக்கால நினைவுகளை-
நினைவுபடபெட்டகத்தில்
அடைகாத்து வருகிறேன்

உணர்வுக் காட்டில்
கடலின் ஆழத்தில்

தோன்றிவரும்
பேரமைதியாய்-

பசுமை உணர்வுகளை
இலைநரம்புகளில்-
சித்திரமாய்-
வரைந்து வைத்திருக்கிறேன்

இமைகளின் ஆழத்தில்
புதைந்து கிடக்கும்
இருள் கலைந்து போக-

இரவுப் பறவைகளின்
சிறகிடுக்கில்-
சிக்கித் தவிக்கிறேன்

மௌனம் கலைந்து-
சிதறும் மத்தாப்பாய்
சொற்கள்-
வீரியமாகப் புறப்பட்டு வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்த்தசாமம்

ஊர்தூங்கும்
அர்த்தசாமத்தில்
நான் மட்டும்
விழித்திருக்கிறேன்-

பிரக்ஞையற்ற
உடலிலிருந்து
ஆத்மா மட்டும்
உயிர்ப்போடு

நரை திரைக்கோடுகள்
சித்திரங்களாய்-
இளமை அப்படியே
சுருங்கிப் போகிறது..

நீரில் உடையும்
நீர்க்குமிழிகளாய்-
இளமை கரைகிறது

நீலவானையும்-
சிந்தும் பனித்துளியையும்
மகிழ்வு தரும் காதலையும்-

இரசிக்க காலம்
இடம் கொடுப்பதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதயத்தின் அதிர்வுகள்....

என் எண்ணத்தை(ச்)
சொல்வதற்கு-
எத்தனை காலம்
காத்திருந்தேன்

இதயத்தின் அதிர்வுகள்
உயிர் துளைத்து-

இறகின் மயிர்க்கால்களில்
இறுக்கமான
சுமைகளைத்
தந்துபோகின்றன-

மயில் இறகு விரல்களால்
மெல்ல மெல்ல-
தடவிக் கொள்கின்றன

துணிவிழந்து போன
பிஞ்சு மனதினால்
தேகம் கரைந்து
உருகிப்போகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரு மனித முகங்கள்....

நீலவான ஓடை
மிதக்கும் வெண்ணிலவு
மலைக்காற்று காதோரம் பேசும்
பகலை விரட்டியடித்தபடி
மாலை மயங்கிவிடும்
அவள் கறுப்புவிழியில்
நினைவுகள் கரைந்து போகும்

விழிக்குளத்தில் நீந்தும் மீன்கள்
போதிமரத்துச் சிற்பங்களாய்-
வார்த்தைகள் மறந்துபோய்
மெழுகுச் சிலைகளாய்
இருமனித முகங்கள்-
மூச்சுக்காற்று ஒன்றாய் இயங்கும்
இரவின் உயிராய்-
பாதித்தூக்கம் கலைந்து-
இனிதாக பயணம் தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலைக் கருக்கல்

மாலைக் கருக்கலில்
என் இதயச்சோலையில்
பூக்கள் பூப்படைகின்றன

உள்ளிருந்தே
உயிர் பெறுகிறேன்

கனவுச் சுமைகள்-
கார்த்திகை நிலவாய்
மறைந்துபோகின்றது.

காற்று வெளியிடை
உழவனின்-
கண்ணீர்த்துளிகள்
காற்றில் கரைகிறது.

எதிர்பார்ப்புக்கள்
ஏமாற்றங்களாகி
முடிவிலியாய்-
முகாரிபாடுகின்றன

நீரோடும்-
வாய்க்கால்..
பாதைகளாய்
வரட்டுச் சித்தாந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருவகால நினைவுகள்.....

கார்காலத்து வானம்
கரைந்து போய்-
மழைத்துளிகள்
பூமியை முத்தமிடுகின்றன

பருவகாலத்து நினைவுகள்
எரிவாயு சிலிண்டர்களாய்
உள்ளத்தில் வெடித்து
சிதறிப் போகின்றது-

மழையில் நனைந்த பறவை
சிறகுலர்த்தும் போது
உருண்டு செல்லும்
நீர்த்துளியாய்-

நினைவுகள் நினைவிழந்து
வழிமாறிச் செல்லும்
அவள் சிந்திய-
ஒற்றைப் புன்னகை காண

ஆயிரம் மின்னல்கள்
உள்ளத்தில் முட்டி மோதும்...
ஒன்றும் தெரியாதவளாய்-

மின்மினிப் போர்வையில்
கண்ணில் மைகரைய-
கனவில் உலா வருவாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லறைத்தீபங்கள்

உள்ளத்தில் உணர்வுகள்
மெல்ல மெல்ல-
அலைமோதிச்செல்கிறது

செங்காந்தள் மலர்கள்
மண்ணறைகளில்
மழைமாதத்தில் மலர்கின்றன

சாதிக்க நினைத்து-
கல்லறை தீபங்கள்
காற்றில் கரைந்து போயின

சங்கத் தமிழர் மாண்பை விஞ்சிய
வீரர்கள் நீண்ட உறக்கத்தில்
கொதித்தெழும் நினைவுகள்
வடிகால்கள் தேடுகின்றன...

நரிகளின் ஊளையிடும் சத்தம்
இரவைக் கிழித்துக் கொண்டு
காற்றில் அலைமோதும்-

அணையா தீபங்கள்
மௌனமாய்-
மனங்களில் எரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கினிப்பறவை

அக்கினி நிறைந்த உலகில்
தீப்பறவையாய்-
சிறகசைத்துப் பறக்கிறேன்

தீயை நோக்கிய
என் பயணத்தின்
நீட்சியை கண்களில்
சுமந்து செல்கிறேன்

நெருப்பு நாட்களை-
விழுங்கியபடியே
காலக்கரியை துப்புகிறேன்

தாகம் மட்டும் அடங்கவில்லை
என் ஆத்மராகம்-
இசைவேள்வி செய்கிறது

சுதந்திரம் கிடைத்தது-
சுகம் மட்டும்
இதுவரை கிடைக்கவில்லை

பழத்தில் உறங்கும்-
பெருவிருட்சமாய்
இலட்சியங்கள்
உறங்கிக்கொள்கின்றன..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழியலை...

தென்றலை
விழியலையில்
சிறைவைத்திருக்கிறாள்.
முழு அழகையும்
சுமந்தபடி வருகிறாள்
கயல் போன்ற கண்கள்
போதை ஏற்றியபடி
நர்த்தனமிடுகின்றன

இளமைக்கால
ஏற்ற இறக்கங்கள்
அங்கலாய்கின்றன

இரட்டைச் சடையில்
நட்சத்திரப்பூக்கள்
காதணி வட்டமாய்
அசைந்தாடுகின்றது-

இளமைத்துள்ளல்
கரங்களால்-
பந்தினை குறிபார்த்து
சுடுகின்றாள்-
இலக்கு மெய்யாகிறது
ஆனந்தமாய்-
முகத்தில்
மௌனப் புன்னகை
சிந்திநிற்கிறாள்-
அவன் இலக்கு மட்டும்
பொய்யாகிப்போய்
கலைந்து போகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெப்பக்காற்று...

பாலைநிலத்து
வெப்பக்காற்றாய்
இலங்கை தேசம் முழுவதும்
பற்றி எரிகிறது...

வீட்டில் இருக்கும் மானுடம்
வீதியெங்கும் வரிசையில்
எரிபொருளுக்காய்
விடிவது தெரியாமல்..
தவம் கிடக்கிறது

இடையிடையே..
இரும்புக்கரங்கள்..
மனித உடலை கிழித்தெறிந்து
இரத்தத்தில் மிதக்க வைக்கிறது..

இதயங்களை இறுக்கிப்பிடித்து
மானுடம் வீதியில்..
மாண்டு போகிறது-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சிப்பீடத்தில்..
இரக்கமில்லா மாக்கள்
சிம்மாசனங்களை
சூடேற்றிக் கொள்கின்றன..

புத்தகப்பைகளைத்..
தொலைத்தபடி..
எதிர்கால மாணவர்கள்..
வாழ்வைத் தேடுகின்றார்கள்

பிறப்பில்லா வாழ்க்கை
எதிர்கால கனவுகளை
சிதைத்து சீரழிக்கிறது

புலம்பெயர்ந்த மேகங்களுக்காய்
நிலம் காத்துக்கிடக்கிறது
புதிய விளைச்சலுக்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூரிய அஸ்தமனம்.....

ஓடிக் களைத்துப்போன -
சூரியன் மெல்ல மெல்ல
அஸ்தமனமாகிக் கொண்டான்
பரந்துவிரிந்து போன மலைகள்
உலக வரைபடங்களாய்-
மாறிக்கொண்டிருந்தன

கோவைப்பழமாய்-
வானம் கனிந்துபோனது
நட்சத்திரப்பூக்கள்
மலர்வதற்காய் தயாராயின-
கொடிய கானகத்தில்
எதுவுமே தெரிவதாகயில்லை-

கானப்பறவைகள்-
ஓய்வுக்காக
வேடந்தாங்கலில்
உறங்கிப்போயின..
வெள்ளை நிலவை
கொள்ளையிட்டு-
வேற்றுநாட்டிற்கு
விற்பனை செய்வதற்காய்-
அரசியல் தலைவர்கள்
பொறியோடு காத்திருந்தார்கள்
இன்று அமாவாசை நாள்-
என்பது தெரியாமலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலையே என்னை விடுதலை செய்

முகவரி இழந்து
இலக்குகளை மறந்து
நொந்து போய்-
மண்ணில் புதைந்து கிடக்கிறேன்.

முட்டையில் இருந்து
கட்டுடைந்து -
வெளிவரத் துடிக்கும்
கோழிக்குஞ்சாய் நான்
விடுதலை பெறத்துடிக்கிறேன்.

அடக்குமுறைகளை
தகர்த்தெறிந்து-
வர்க்க முரண்பாட்டு
வேர்களை கிழித்தெறிந்து
காற்றாய் புறப்பட்டுவிட
விடுதலையே என்னை விடுதலைசெய்-

துன்பியலை அனுபவித்து
சிறைப்பறவையாய்-
எத்தனை காலங்களாய்
அடைப்பட்டு கிடக்கிறேன்-

வானத்தில் தோன்றிடும்
ஒற்றைக்கோடாய்-
இனியமுகம் காட்டும்-
சூரிய உதயத்திற்காய்-
தவங்கிடக்கிறேன்-
விடுதலையே என் கட்டுக்களை
விரைவாக உடைத்தெறி

(நன்றி ஐ.பி.சி வானொலி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிச்சைக்காரன்

இமைக் கதவுகள்
மோதித் திறந்து கொண்டன
ஆச்சரிய நகரத்தின்
வீதியோரமாய் -

கந்தல் போர்வையை
இழுத்துப் போர்த்தியபடி
பிச்சைக்காரன்
நித்திரை செய்கிறான் -

அவன் கனவுகளில்
நேற்றுக்கள் தொலைந்து
நாளைகள் மாத்திரம்
பாத்திரத்தை -
நிரப்பிக் கொள்கிறது -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "கொரோனா தீ.."

கொரோனா
தேசத்தீயில்
மானுடச் சருகுகள்
வெந்து -
கருகிப் போகின்றன

நூற்றாண்டுகாலம்
வாழ்வதற்காய்
கனவு கண்ட
மானுடக் கூட்டம்

வீதியோரங்களில்
தகனத்திற்கா(ய்)
காத்துக் கிடக்கின்றன

சிந்தனையால்
சிறகடித்துப் பறக்கும்
உலகம் -
செய்வதறியாமல்
வாழ்வை நிலைக்க வைக்க
சிலுவை சுமக்கிறது

2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊழிக்காலம்

உலக தோற்றத்தோடு
புறப்பட்டு வெளிவந்த
சூரியன் - சந்திரன் எல்லாம்
கால நகர்விற்கு ஏற்ப
நகர்ந்து கொள்ளுகின்றன.
மனிதன் மிருகங்களாய் மாறி
வாழ்க்கை நடத்துகிறான்.

பருவக்காலத்துப் பறவைகளாய்
மனிதன் உருமாறிவிட்டான்
நீர்நிலை தேடி மிருகமாய்
அலைந்து திரிகிறான்
தம்மைத்தாமே தின்னும்
மூர்க்கத்தனமான மிருகங்களாய்
போராயுதங்களை
தமது கைகளில் ஏந்தியபடி
உலகை துடைத்தெறிய
புறப்பட்டு வஞ்சனையோடு
வலம் வருகிறான்.

அர்த்தமற்ற போரினால்
அடிமையாகிவிட்டான்
ஊழிக்காலப் பிறப்பை
காலம் உணர்த்தி நிற்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரும்பலகை கடவுளர்

வலிகளை மனதில் சுமந்து
ஏற்றி வைத்த ஏணிகள்
வெண்கட்டி பிடித்தபடியே
பயணம் சொன்ன பாதைகள்
நடை பழக்கிய கைவண்டிகள்

காற்றிலும்,மழையிலும்
மாணவரைக் காப்பாற்றிய
நிழற்குடைகள்
தம்மைத் தொலைத்து
ஒளிகொடுக்கும் மெழுகுவர்த்திகள்
மனித சிற்பங்கள் செதுக்கிய
தெய்வ சிற்பிகள்
ஏச்சுக்களையும், பேச்சுக்களையும்
சுமந்துச் செல்லும் மானுடச் சிலுவைகள்

தன்னிடம் கற்பவனை
உயர்த்தி வைத்து
பெருமைத் தேடும் சூரியர்கள்
பேனா பிடித்து - அகரம் - சொன்ன
கரும்பலகைக் கடவுளர்
வேர்கள் தெரியாமலே
மரங்களைத் தாங்கும் விருட்சங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிக்காய் பயிற்சி கொடுத்து
கரைசேர்த்த தோணிகள்
கூழாங்கற்களைப் பட்டைத் தீட்டி
வைரமாய் மாற்றும் வித்தைக்காரர்கள்

பெற்றோர் கைவிட்ட குழந்தைக்காய்
கல்விப்பால் ஊட்டும் தாய்மார்
சிரிக்க வைத்து சிந்தனை ஊட்டும்
சிலையாய் நிற்கும் கடவுளர்
புதிய உலகைக் காண
தம்மை கல்லறையாய் ஆக்குபவர்
நடமாடிச் செல்லும் உயிர்த் தெய்வங்கள்.


நன்றி..

ஐ.பி.சி. வானொலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூலாசிரியர் பற்றி....

பரந்து விரிந்த ஈழத்து இலக்கியப் பரப்பில்
சமகால முன்னோடிகளில் கவிஞர். கனகசூரியம்
யோகானந்தன் ஒரு விடிகாலை வெள்ளி
சம்பூரைச் சேர்ந்த இவரின் உரையாடல்களும்
திறன்மிகு நயப்புரைகளும் நாடுகடந்தும்
பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றன.
தன்னுடைய அழுத்தம் திருத்தமான உரையாடலினாலும்
கணீரென்ற இனிமையான குரல் வளத்தாலும் அரங்கை
ஆளுநர் திறன் இவருக்குக் கைவந்த கலை

இன்று வெளியீடு செய்யப்படும் "காற்றுக்குத் தூது விட்டு.." எனும்
கவிதை நூல் இவரது ஐந்தாவது படைப்பாகும். பலசதாப்தமாக
கவிதைகளோடு ஊடாடி வருகிறது மட்டுமல்லாது
இளையோரையும் தனது கவிநயத்தினால்
மெருகூட்டி உரம் சேர்க்கும் இவரின் கவிதைத் தொகுப்பு
சாஹித்ய மண்டலப் பரிசு பெற்றமை எமக்கெல்லாம் பெருமையே,

ஒரு தனிமனித வாழ்வு நிறைவு காண வேண்டுமாயின் அன்பும், அறமும்
சார்ந்த செயற்பாடுகள் அவசியம் இவ்வகையான வாழ்வில் உள்ளம்
கனிந்து உவகை பொங்க ரசனைமிகு செயல்களை கண்டும்
கேட்டும், உணர்ந்தும் கொள்ள வேண்டியது அவசியமானது.

இவ்விடயங்களை இலக்கியங்கள் குறிப்பாக கவிதைகளிலேயே நாம்
காணலாம். நயம்மிக்க கவிதை வரிகளை

வரலாறுகளாகவோ
சம்பவங்களாகவோ
ஆதாரங்களாகவோ
எழுச்சி மிகு வார்த்தைகளாகவோ தருவது கவித்துவத்தின்

உச்ச பண்புகளில் முக்கியமானது. இவ்வகையான கவிதைகளை
பிறப்பிக்கும் ஆற்றல் மிகு கவிஞர் நம் காலத்திலும் வாழ்வது
எமக்கெல்லாம் பெருமையே அவருடைய இந்நூல்
காலத்தின் கண்ணாடியாக பிரதிபலிக்கும் போது
அங்கே எம்மவர்களின் முகங்களையும்
நாம் காணக்கூடியதாக இருக்கும்.

ISBN 978-624-99849-0-5

நன்றி
மருத்துவர். அருமைநாதன் சதீஸ்குமார்
சம்பூர் - மூதூர்
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org